**செய்தி வெளியீடு எண்: 057** **நாள் : 03.02.2015**

# செய்தி வெளியீடு

தமிழ் நாடு அரசு பொது மக்களுக்கு பல்வேறு துறைகளின் மூலம் திறம்பட அளித்து வரும் சேவைகள் அரசின் மூலமாக எதிர்பார்க்கப்படும் உத்தரவுகள், உரிமங்கள் அனைத்தும் மக்களுக்கு எளிதாக / விரைவாக சென்றடைய வேண்டும் என்ற முனைப்புடன் பணியாற்ற தற்போதுள்ள நடைமுறைகளை எளிமைப்படுத்தி முறைப்படுத்த தமிழக அரசு உத்தேசித்துள்ளது. அதனை செயல்படுத்தும் விதத்தில், பொதுமக்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அதன் தொடர்பான நிறுவனங்களிடமிருந்து ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. அவ்வாறு அளிக்கப்படும் ஆலோசனைகள், தீவிர பரிசீலனைக்குப்பின் சம்பந்தப்பட்ட அரசுத் துறைக்கு அனுப்பப்படும். அத்துறையானது திருத்திய நடைமுறைகளை வெளியிடுவது குறித்து ஆய்வு செய்து முடிவெடுத்த பின்னர் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்த ஆலோசனைகளை simplifyprocedureintn@tn.gov.in என்ற மின்னஞ்சலில் **500 வார்த்தைகளுக்கு மிகாமல்** கீழ்க்காணும் தலைப்புகளில் (முடிந்த மட்டும் வரைபடம் மூலம்) சமர்ப்பிக்கலாம்.

அ) தேவைப்படும் சேவை (சான்றிதழ் வழங்குதல் / கட்டணம் செலுத்துதல் போன்றவை)

ஆ) எத்துறை / துறைகளில் அளிக்கப்படும் சேவைகள் சார்ந்தது

இ) தற்போதுள்ள நடைமுறை

ஈ) தேவைப்படும் மாற்றங்கள்

உ) தோராயமான தலைப்பு / நடைமுறையின் பெயர்

ஊ) மாற்றத்திற்கான விளக்கம்

ஆலோசனைகள் மார்ச்,05.2015–க்குள் அனுப்பப்பட வேண்டும்.

முதன்மைச் செயலாளர்
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**